# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 செப்டம்பர் திங்கள் 28.09.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**31.08.2012–ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாகம், மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கீழ்கண்ட கடைகளுக்கான உரிமம் முடிவடைந்துவிட்டபடியால், மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், தற்போதைய மாத வாடகையில் 15% உயர்வு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | உரிமதாரர் பெயர் | உரிமம் முடிவடையும் காலம் | தற்போதைய வாடகை ரூ. | 01.07.2012 முதல் 30.06.2015 முடிய வாடகை – ரூ. |
|---|---|---|---|---|---|
| **31.01.2012 மற்றும் 30.06.2012–உடன் உரிமம் முடிவடையும் கடைகள்** (அ) பேருந்து நிலைய கடைகள் | | | | | |
| 1 | 23 | திரு. டிகால் | 01.02.2012 முதல் 31.01.2015 முடிய. | 596 | 685 |
| 2 | 39 | திரு.சி.எஸ்.ராஜ் | 01.07.2012 முதல் 30.06.2015 முடிய. | 550 | 632 |
| (ஆ) கவியரசு கண்ணதாசன் வணிக வளாகக் கடைகள் | | | | | |
| 3 | 4 | திரு.முகம்மது அப்துல் நாசர் | “ | 1520 | 1748 |
| (இ) கலைஞர் கருணாநிதி வணிக வளாகக் கடைகள் | | | | | |
| 4 | 1 | திருமதி. நிர்மலா | “ | 1530 | 1759 |
| **30.07.2012–உடன் உரிமம் முடிவடையும் கடைகள்** (அ) கலைஞர் கருணாநிதி வணிக வளாகக் கடைகள் | | | | | |
| 5 | 2 | திருமதி. நிர்மலா | 01.08.2012 முதல் 30.07.2015 முடிய. | 1525 | 1754 |
| 6 | 3 | திரு. ஜெகதீஷ் | “ | 1520 | 1748 |
| 7 | 4 | திரு.சபீக் அகமது | “ | 1525 | 1754 |
| 8 | 5 | திரு.ஞானசேகர் | “ | 1520 | 1748 |
| 9 | 6 | திருமதி. பாத்திமா | “ | 1520 | 1748 |
| 10 | 7 | திருமதி. கிளாடி | “ | 1530 | 1759 |
| 11 | 8 | திரு.பால்தாஸ் | “ | 1515 | 1743 |
| 12 | 9 | திரு.பால்தாஸ் | “ | 1920 | 2208 |
| 13 | 25 | திரு.பால்தாஸ் | “ | 1520 | 1748 |
| 14 | 10 | திருமதி. அஜிதா | “ | 1920 | 2208 |
| 15 | 11 | திருமதி. அஜிதா | “ | 1925 | 2214 |
| (ஆ) கவியரசு கண்ணதாசன் வணிக வளாகக் கடைகள் | | | | | |
| 16 | 5 | திரு யூசுப் | “ | 1520 | 1748 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | 6 | திரு. சுல்தான் | “ | 1530 | 1759 |
| 18 | 7 | திரு. சுல்தான் | “ | 1520 | 1748 |
| 19 | 12 | திருமதி. கலைச்செல்வி | “ | 1520 | 1748 |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/2002)

**தீர்மானம் எண்.375 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 1**

இந்நகராட்சியில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2012–13–ம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செயல்முறை ஆணை எண்.ஆ3/1946/2012 நாள் 03.09.2012–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு ஆலயம் அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழலகம் கட்டுதல். | 2.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை ஜங்சன், காந்தி ஜங்சன், பீச் ஜங்சன் மற்றும் பெரிய பள்ளி வாசல் ஜங்சன் ஆகிய பகுதிகளில் மினி ஹைமாஸ் விளக்குகள் அமைத்தல். | 10.00 |

அதனடிப்படையில் மேற்காணும் பணிகளுக்கு 26.09.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2924/2012)

**தீர்மானம் எண்.376 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2,3, மற்றும் 4 ஆகிய வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1688–ல் நாள் 29.07.2011–ன் மூலம் ஒப்புதல் அளித்து திரு.A.P.வாரன், ஒப்பந்ததாரர் மூலம் 6 பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 17.08.2012–ல் ஓராண்டுகள் முடிவடைவதால் மேற்படி பணியினை செய்ய புதிய ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுவரையிலான இடைப்பட்ட காலம் 18.08.2012 முதல் 31.10.2012 வரை பொது சுகாதார பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்படி ஒப்பந்ததாரர், திரு.A.P.வாரன் அவர்கள் மூலம் பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்றமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.2622/2009/எச்1)

**தீர்மானம் எண்.377 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரின் Digital Signature Card –ஐ புதுப்பிப்பதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.326, நாள் 31.08.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் பணியின் அவசர அவசியம் கருதி தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து மின்னஞ்சல் மூலம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | SAFE Solutions, Coimbatore | : Rs. 1798/- |
| 2 | R3e Consulting Private Limited, Chennai | : Rs. 3950/- |
| 3 | Bharghavan Consultancy, K.K.Nagar, Madurai | : Rs. 3800/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் SAFE Solutions, Coimbatore நிறுவனத்தின் ரூ.1798/—க்கான விலைப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி Digital Signature Card —ஐ உடனடியாக புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.280/2010/இ1)

**தீர்மானம் எண்.378 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிகளுக்காக PULS FOG 5 லிட்டர் அளவு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.269 நாள் 31.05.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்காணும் 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | Seven Star Traders, Chennai | : Rs. 66,150/- |
| 2 | Tritech Systems, Chennai | : Rs. 68,250/- |
| 3 | Business Star Agencies, Chennai | : Rs. 67,200/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள Seven Star Traders, Chennai நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை அங்கீகரித்து, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மற்றும் பொது சுகாதார நலன் அவசர அவசியம் கருதி மேற்படி குறைவாக தொகை வழங்கியுள்ள Seven Star Traders, Chennai நிறுவனத்திற்கு இயந்திரம் சப்ளை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மற்றும் பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3702/2009/எச்1)

**தீர்மானம் எண்.379 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த விலைப்புள்ளியை ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் ஆகஸ்ட் 2012 – 15—ம் தேதி சுதந்திர தினவிழாவிற்கு திரு.பி.மணி, துப்புரவுப்பணி மேற்பார்வையாளரால் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 4214/— வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.3575/2012/எச்1)

**தீர்மானம் எண்.380 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியிலுள்ள புதிய சர்வர் கணனியின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் ( AMC ) இக்கணனி உற்பத்தியாளரான HCL நிறுவனத்தாருக்கு கொடுக்கப்பட்டு **31.08.2012**–வுடன் முடிவடைகிறது. கடந்த ஒரு வருடத்தில் நல்லமுறையில் பழுதுகளை நீக்கி தந்துள்ளார்கள். தற்போது AMC புதுப்பிப்பதற்கான கடிதம் வரப்பெற்றுள்ளது. அவசர அவசியம் கருதி HCL நிறுவனத்தாரின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தை ( AMC) புதுப்பித்துக் கொள்ள தொகை **ரூ.13,913/–** செலவு ஆகிறது. மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.544/2006/அ1)

**தீர்மானம் எண்.381 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சியின் 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம். ஏ. ரஹீம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட பழமை வாய்ந்த அரசு சுற்றுலா மாளிகையில் போதிய தங்கும் வசதிகளோ, அடிப்படை வசதிகளோ இல்லை. எனவே இந்த ஆய்வு மாளிகையை புதியதாக கட்ட சம்மந்தப்பட்ட பொதுப்பணித் துறை மற்றும் தமிழக அரசையும் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.382 . ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 செப்டம்பர் திங்கள் 28.09.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**
**குளச்சல் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டுவரும் சிறப்பு தீர்மானம்**

வரலாற்று புகழ்வாய்ந்த பெருந்தலைவர் காமராசரின் தமிழக அமைச்சரவையில் 1957–ல் அமைச்சர் பொறுப்பினை வகித்த குமரி மண்ணின் தாரகையும், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க அமைச்சராக பணியாற்றிய மீனவ சமுதாயத்தை சார்ந்த சிறப்புமிக்க அமைச்சர் பதவியை வகித்து, வாழ்ந்து மறைந்த மாண்புமிகு திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்களை நினைவுகூரும் வகையிலும், அவர்களின் திருஉருவம் என்றும் மக்களின் மனதில் நீங்கா இடத்தை பெற்றிடவும் குளச்சல் நகரத்தில் கடற்கரை ஒட்டிய பகுதியில் முழுஉருவ வெண்கல சிலை அமைத்திடவும், துறைமுகப் பகுதியில் பாலத்தின் முகப்பு பகுதியில் அவர்களின் பெயரில் நூற்றாண்டு விழா வளைவு (ஆர்ச்) ஒன்று அமைத்திட தீர்மானம் நிறைவேற்றிடவும், அத்தீர்மானத்தினை அரசுக்கு அனுப்பி அனுமதி பெற்றிடவும் மன்றம் தீர்மானிக்கலாம். அதற்கான இடம் பின்னர் தேர்வு செய்யப்பட்டு மன்றம் ஒப்புதல் பெறப்படும் என்ற விவரமும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
**தீர்மானம் எண்.383 . ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்டுள்ள சேதங்களை சரி செய்வதற்காக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஜி4/24347/2011 நாள் 23.12.2011 –ன்படி ரூ.100.032 இலட்சத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு கீழ்க்கண்ட தேர்வு செய்யப்பட்ட பணிகள் நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | செலவுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகச் சாலையில் தார் சாலை அமைத்தல். | **49.98** | **4985768/–** |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனியில் சமுதாய நலக்கூடம் அருகில் பேவர் பிளாக் சாலையும், அதன் அருகில் உள்ள குறுக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி செய்தல். | 10.00 | 10,00,000/– |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் முண்டம்பிலாவடி தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 7.45 | – |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட அந்தோணியார் காலனி மற்றும் ஜோசப் பெனடிக்ட் காலனியில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 3.10 | 3,00,000/– |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வடக்கு கள்ளியடைப்பு சாலையில் தார் சாலை அமைத்தல். | 5.70 | 537169/– |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் முதல் பாலத்தன்கரை வரை தார் சாலை அமைத்தல். | 8.90 | 813358/– |

| | | | |
|---|---|---|---|
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் புதுத்தெருவில் தார் சாலை அமைத்தல். | 6.65 | 593799/– |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை குறுக்கு தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.62 | 384689/– |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனி குறுக்கு தெருக்களில் குடிநீர் குழாய் பதித்த சிமெண்ட் தள சாலையில் ஒட்டு பணிகள் செய்யவும், அமிர்தானந்தமயி காலனி அருகில் சிறுபாலம் மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல். | 2.70 | 217822/– |
| | மொத்தம் | **100.10** | **8832605/–** |

மேற்படி பணிகளில் வ.எண்.3–ல் மதிப்பீடு தொகை ரூ.7.45 இலட்சத்தில் களிமார் முண்டன்பிலாவடி தெருவில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி துவங்கிய போது அப்பகுதி பொதுமக்கள் தற்பொழுது தெரு மிகவும் குறுகலாக இருப்பதாகவும், தெருவை விரிவுபடுத்திய பிறகு பணியை மேற்கொள்ளலாம் எனவும், அதுவரை பணியை நிறுத்தி வைக்கவும் தெரிவித்ததால் மேற்படி பணியானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பணியானது திட்டப் பணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாலும், பணியை விரைவில் முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியதிருப்பதாலும், அதே மதிப்பீட்டு தொகை ரூ.7.45 இலட்சத்திற்கும் மேற்படி திட்டப்பணிக்கான ஒதுக்கீட்டு தொகையில் பணி முடித்து, செலவு செய்த தொகை போக மீதமுள்ள தொகைக்கும் சேர்த்து கீழ்க்காணும் விவரப்படி மாற்றுப் பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1–ல் தொலைபேசி நிலைய சாலையில் தார்ச்சாலை புதுப்பிக்கும் பணி மற்றும் வடிகால் ஓடை பராமரிக்கும் பணி செய்தல். | 7.45 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1–ல் காருண்யா பள்ளி முன்புறம் அமைந்துள்ள சாலைக்கு பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி செய்தல். | 2.80 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20–ல் ரிபாய் பள்ளி அருகேயுள்ள மங்களாவு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி செய்தல். | 2.50 |
| | **மொத்தம்** | **12.75** |

மேற்காணும் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டு தொகை 12.75 இலட்சத்தில் திட்ட நிதி ஒதுக்கீட்டு தொகையில் பணி முடித்து செலவு செய்த தொகை போக மீதமுள்ள தொகை ரூ. 11,77,395/– போக மீதித் தொகை ரூ. 97,605/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** (1) மேற்காணும் திட்டப்பணிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணியினை சாலையை விரிவுபடுத்திய பின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2) திட்ட நிதி ஒதுக்கீடு போக மீதித் தொகை ரூ. 97,605/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7913/2011)

**தீர்மானம் எண்.384 . அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.3ன் பணியானது திட்டப்பணியில் சேர்த்த பணியானதால் அப்பணியின் தொகையினை 1வது வார்டு தொலைபேசி நிலைய சாலையையும் காருண்யா சாலையையும், 20வது வார்டில் பணிசெய்யவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில் மேற்படி திட்டத்தில் பணிகள் மேற்கொள்வதற்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.870/2012/ஆ1 நாள் 27.04.2012–ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் மேற்படி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் தொடர்பான விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் திங்கள்நகர் பிரதான சாலையில் வி.கே.பி. பள்ளி முதல் காந்தி ஜங்சன் வரை மற்றும் திக்கணங்கோடு சாலையில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles மற்றும் மழைநீர் ஓடை இல்லாத பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் டைல்ஸ் பதித்த நடைபாதை அமைத்தல். | ரூ. 35.00 இலட்சம் |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட பீச் சந்திப்பு முதல் களிமார் பாலம் வரை மற்றும் அண்ணாசிலை சந்திப்பு முதல் பெரியப்பள்ளி சந்திப்பு வரை ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles அமைத்தல் மற்றும் மழைநீர் ஓடை இல்லாத பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் Tiles பதித்த நடைபாதை அமைத்தல். | ரூ.33.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.68.00 இலட்சம்** |

மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ.68.00 இலட்சத்தில், போக்குவரத்து மேம்பாட்டுத்திட்ட ஒதுக்கீட்டு தொகை ரூ.50.00 இலட்சம் போக மீதி தொகை ரூ.18.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
(2) மேற்படி பணிகளுக்காக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள குளச்சல் நகர்மன்றத்தின் 31.05.2012–ம் தேதிய 252–ம் எண் தீர்மானத்தினை ரத்து செய்யலாம்.

(ந.க.எண்.இ1/4586/2006)

**தீர்மானம் எண்.385. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 31.05.2012ம் தேதிய 252ம் எண் தீர்மானம் ரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் நகர்மன்றத் தலைவர் அலுவலக உபயோகத்திற்காக Letter Pad & Office Cover அச்சடித்த வகையில் ரூ.1,750/– ஐ வழங்க கேட்டு தாசன் ஆப்செட் மற்றும் ஸ்டேசனரி நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.co/3720/2010)

**தீர்மானம் எண்.386. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2, 3, மற்றும் 4 ஆகிய வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு, 7 தினக்கூலி பணியாளர்களை நாள் ஒன்றிற்கு ரூ.275/– ஊதியத்தில் ஒரு ஆண்டிற்கு பணிக்கு அமர்த்தவும், அதற்கு ஆகும் வருடாந்திர செலவுத் தொகை ரூ. 6,35,200/–க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.353–ல் நாள் 31.08.2012–ன் மூலம் ஏற்கனவே

ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் 17.09.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.A.P.வாரன்,<br>11/73, நடுத்தெரு, தாழக்குடி | :ரூ. 6,00,600/—<br>(மதிப்பீட்டு விகிதம்) |
| 2 | திரு. T.ராஜேஸ்,<br>சர்ச் தெரு, சீதப்பால் | ரூ. 6,33,360/—<br>(5.45% மதிப்பீட்டைவிட கூடுதல் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள திரு.A.P.வாரன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.A.P.வாரன், தாழக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2622/2009/எச்1)

**தீர்மானம் எண்.387. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனியில் அமைந்துள்ள குப்பை கொட்டுமிடத்தில் நிரம்பியுள்ள குப்பைகளை ஜே.சி.பி. மூலம் அகற்றுவதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,10,000/— க்கு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 26.09.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | M.H.Earth Works,<br>20/66, Chettivilai, Colachel | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ. 1,95,960/—) |
| 2 | A One Earth Works,<br>18/4. Fort Street, Colachel | 1.45 % மதிப்பீட்டை விட கூடுதல்.<br>(ரூ.1,98,800/— ) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M.H.Earth Works நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,10,000/—க்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

(2) மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M.H.Earth Works நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/342/2012)

**தீர்மானம் எண்.388. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் குடிநீர் உபயோகத்திற்கு 33 சதவிகித குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடர் விநியோகம் செய்வதற்கு ரூ.50,000/— மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.329, நாள் 31.08.2012—ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 26.09.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | M/s. ஜெயபாபா டிரேடர்ஸ்,<br>15/114.பி. தாழக்குடி. | மதிப்பீட்டு விகிதம்<br>ரூ.27.50 |
| 2 | M/s. சண்முகா கெமிக்கல்ஸ்,<br>18/15, வடசேரி. | 5.45 % மதிப்பீட்டை விட அதிகம்<br>(ரூ. 29/— ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் கொடுத்துள்ள M/s. ஜெயபாபா டிரேடர்ஸ், தாழக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1110/2008)

**தீர்மானம் எண்.389. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.37191/12/இ1 நாள் 14.09.2012—ன்படி, இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2012—13 திட்டத்திற்கு கீழ்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | திட்ட நிதி (ரூ. லட்சத்தில்) | நகராட்சி நிதி (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| I | **சாலைப்பணிகள்** | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடற்கரை சாலையில் ஆர்.சி.கோயில் அருகில் சிமெண்ட் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 10.85 | 8.68 | 2.17 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 7.45 | 5.96 | 1.49 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட வண்ணாத்தி விளையில் சிமெண்ட் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 6.20 | 4.96 | 1.24 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட செட்டியத் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 10.50 | 8.40 | 2.10 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 3.00 | 2.40 | 0.60 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட மொகைதீன் பள்ளி ரோட்டில் சிமெண்ட் கான்கிரீட் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 12.00 | 9.60 | 2.40 |
| | **மொத்தம்** | **50.00** | **40.00** | **10.00** |
| II | **தெருவிளக்கு பணிகள்** | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குறித்த நேரத்தில் இயங்கும் தானியங்கி தெருவிளக்கு சுவிட்ச் வினியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல். | 7.50 | 7.50 | 0.00 |
| 2 | இந்நகராட்சியில் சூரிய ஒளியிலிருந்து 30 கிலோ வாட்ஸ் மின்சாரம் தயாரிக்கும் அமைப்பு நிறுவும் பணி செய்தல். | 31.90 | 31.90 | 0.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4 எண்ணங்கள் 90 வாட்ஸ் LED விளக்குகளுடன் கூடிய சிறிய உயர் கோபுர மின்விளக்குகள் அமைத்தல் | 5.00 | 5.00 | 0.00 |
| 4 | இந்நகராட்சி தெருவிளக்கு பணிகளுக்கு தேவையான அலுமினிய ஏணி (Lifting Ladder) வாங்குதல் | 1.20 | 1.20 | 0.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின்கலம் மற்றும் மின்கம்பத்துடன் கூடிய சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல். | 6.00 | 6.00 | 0.00 |
| 6 | இந்நகராட்சிக்கு தேவையான 20 வாட்ஸ் LED விளக்குகள் மற்றும் உபகரணங்கள் வினியோகம் செய்தல் மற்றும் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் பொருத்துதல். | 20.40 | 20.40 | 0.00 |
| | **மொத்தம்** | **72.00** | **72.00** | **10.00** |
| **III** | **வடிகால் ஓடை பணிகள்** | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட திக்கணங்கோடு சாலையில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மேல் மூடி அமைத்தல். | 25.00 | 22.50 | 2.50 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி சந்திப்பு முதல் களிமார் பாலம் வரை மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மேல் மூடி அமைத்தல். | 25.00 | 22.50 | 2.50 |
| | **மொத்தம்** | **50.00** | **45.00** | **5.00** |
| **IV** | **திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | | | |
| 1 | இந்நகராட்சிக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பை கொட்டும் தொட்டிகள் HDPE/SS Compactor Bins) 45 எண்ணங்கள் வினியோகம் செய்தல். | 18.00 | 16.20 | 1.80 |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் வேலி அமைத்தல் மற்றும் விஞ்ஞான ரீதியில் நிரப்பும் பணி (Scientific land filling arrangements) செய்தல் | 32.00 | 28.80 | 3.20 |
| **V** | **குடிநீர் வினியோக பணிகள்** | | | |
| 1 | இந்நகராட்சி குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான ஜெனரேட்டர்கள் 2 எண்ணங்கள் வினியோகம் செய்தல். | 75.00 | 75.00 | 0.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோயில் முதல் துறைமுகத்தெரு வரை 6'' பிவிசி குடிநீர் வினியோக பிரதான குழாய் அமைத்தல். | 15.00 | 15.00 | 0.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் மற்றும் காணிக்கை மாதா திருத்தலம் ஆகியவற்றின் அருகில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் அமைத்தல்ல் | 60.00 | 60.00 | 0.00 |
| | **மொத்தம்** | **150.00** | **150.00** | **0.00** |
| | **ஆக மொத்தம்** | **372.00** | **352.00** | **20.00** |

மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ.372.00 இலட்சத்தில் திட்ட நிதி ஒதுக்கீட்டு தொகை ரூ.352.00 இலட்சம் போக மீதி தொகை ரூ.20.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/2012)

**தீர்மானம் எண்.390. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.29225/2011/இ3 நாள் 25.09.2012–ன்படி, இந்நகராட்சியில் 2012–13–ம் ஆண்டிற்கு பிளாஸ்டிக் சாலை அமைப்பதற்கு ரூ. 24.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காணும் விவரப்படி பிளாஸ்டிக் சாலை அமைப்பதற்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் சாலையில் (பவுண்டரி ரோடு ) பிளாஸ்டிக் சாலை அமைத்தல். | 16.86 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட மலிக்காகிணறு சாலையில் பிளாஸ்டிக் சாலை அமைத்தல். | 7.20 |
| | **மொத்தம்** | **24.06** |

மேற்படி பணிகளுக்கான திட்ட நிதி ஒதுக்கீட்டு தொகை ரூ.24.06 லட்சத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைகளில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3594/2012/இ1)

**தீர்மானம் எண்.391. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

**(உண்மை நகல்)**

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி